# அப்பா நான் தவறு செய்தேன்

அப்பா நான் தவறு செய்தேன்
உன் அன்பை உதறிச் சென்றேன் - நான்
கெட்டலைந்து ஓடிவந்தேன்

**1)**
பாடிவரும் பறவைகளும்
காடுகளில் மிருகங்களும்
உன்னன்பில் மகிழ்ந்திருக்க
நான் உன்னைப் பிரிந்து நொந்தேன்

( அப்பா )

**2)**
சுமைகளில் சோர்ந்தோரே
என்னிடத்தில் வாரும் என்றீர்
அந்த ஆறுதல் வார்த்தை என்னை
உன்னிடத்தில் சேர்த்ததையா

( அப்பா )

**3)**
வாழ்வு தரும் வசனமெல்லாம்
நீர் என்று அறிந்த பின்னே
வேறு எங்கு நான் போவேன்
எந்தன் புகலிடம் நீரேயப்பா

( அப்பா )